# வல்வெட்டித்துறை நகரசபை
## ஐம்பத்தி ஒன்பதாவது சபை அமர்வு – 21.10.2022

நகர சபையின் ஐம்பத்தி ஒன்பதாவது அமர்வு சபை மண்டபத்தில் **21.10.2022 வெள்ளிக்கிழமை பி.ப 2.30** மணியளவில் தவிசாளர் திரு.இ.சுரேன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு சமூகமளித்தோர்.

1. திரு.தங்கவேலாயுதம் சுந்தரலிங்கம் - கௌரவ உபதவிசாளர்.
2. திரு.பாலச்சந்திரன் ஜெகன் - கௌரவ உறுப்பினர்.
3. திரு.கந்தசாமி சதீஸ் - கௌரவ உறுப்பினர்.
4. திரு.குகதாஸ் கமலதாஸ் - கௌரவ உறுப்பினர்.
5. திரு.துரைராசா ஸ்ரீதரன் - கௌரவ உறுப்பினர்.
6. திரு.ஆறுமுகம் ஞானேந்திரன் - கௌரவ உறுப்பினர்.
7. திரு.அருமைரத்தினம் சதீஸ்வரன் - கௌரவ உறுப்பினர்
8. திரு.சபாரத்தினம் செல்வேந்திரா - கௌரவ உறுப்பினர்.
9. திரு.இராமச்சந்திரன் சுரேன் - கௌரவ தவிசாளர்.
10. திரு.மகாலிங்கம் மயூரன் கௌரவ உறுப்பினர்.
11. திருமதி.இந்திரன் கைலாஜினி - கௌரவ உறுப்பினர்.
12. திருமதி.சுந்தரேஸ்வரி கவிஞன் - கௌரவ உறுப்பினர்.
13. திரு.சண்முகம்பிள்ளை சண்முகதாஸ் - கௌரவ உறுப்பினர்.
14. திருமதி அன்ரநற் சுபாசினி இமானுவல் சிறில் ஜெயராசா – கௌரவ உறுப்பினர்.
15. திரு.செந்திவேல் தமிழினியன் கௌரவ உறுப்பினர்.

மௌன வணக்கத்துடன் சபை அமர்வை ஆரம்பித்த தவிசாளர், 28.09.2022 ஆந் திகதி நடைபெற்ற 58 ஆவது சபைக்கூட்ட அறிக்கை அடுத்த சபைக்கூட்டத்தில் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுமென குறிப்பிடப்பட்ட போது, முன்னைய மாதத்தில் நடைபெற்ற விடயங்களை தாம் அறிந்து கொள்வதற்கு கூட்ட அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட வேண்டுமென உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டது. தொடர்ந்து 11.10.2022 ஆம் திகதிய 46வது விசேடசபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். பின்வரும் திருத்தத்துடன் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.பா.ஜெகன் முன்மொழிய உறுப்பினர் திரு.து.ஸ்ரீதரன் வழிமொழிய கூட்டக்குறிப்பானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**திருத்தம்** : 3வது பக்கத்தில் 4ஆம் பந்தியில் ''ஏற்கனவே இந்த சபையில் இதே இடத்தில் கௌரவ உறுப்பினர் சதீஸ் இம்மைதானத்தினை கழுகு விளையாட்டு கழகம் கொள்வனவு செய்யப்போவதாகவும், முடிந்தால் நகரசபை அதற்குள் நுழைந்து பார்க்கட்டும் என்று சொல்லியும் சவால் விட்டு சென்றிருந்தார். மீண்டும் இத்தீர்மானத்தினை எடுத்து நகரசபையினை அவ்விடயத்தினுள் எதற்காக புகுத்த நினைக்கின்றார் என்று தெரியவில்லை'' என தம்மால் குறிப்பிடப்பட்ட விடயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினி அவர்களின் கோரிக்கை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**அடுத்**து தவிசாளரின் விசேட அறிவித்தலில் உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசாவின் விடுமுறை அறிவித்தலானது தவிசாளரால் சபைக்கு தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு பாதீட்டினை தயாரிப்பதற்காக உறுப்பனர்களின் திட்ட முன்மொழிவுகளை விரைவாக சமர்ப்பிக்குமாறு கடந்த விசேட சபைக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும், இதுவரையில் பெரும்பாலானோர் சமர்ப்பிக்கவில்லை. எனவே இன்றே அதனை எழுத்து மூலம் சமர்ப்பித்துச் செல்லும் படி தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

அடுத்து நந்தவனம் கடைத்தொகுதியின் மாதவாடகை தொடர்பான அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் JN/RP/3360 ஆம் இலக்க 11/10/2022 ஆந்திகதிய கடிதத்தின் பிரகாரம் குறித்த கடைக்காரர் ஒரு தொகை பணத்தினை Key Money ஆக செலுத்தியமையைக் கருத்திற் கொண்டு மாதவாடகை ரூபா 28,000.00 மதிப்பீடு செய்யப்பட்டமை சபையில் ஆராயப்பட்ட போது, இதுவரை காலமும் சபையினால் மாத வாடகையாக ரூபா 28,300.00 அறவிடப்பட்டு வருகின்றமையால் சபைக்குரித்தான நிதியேற்பாடுகளின் அடிப்படையில் வாடகைக்குறைப்பு செய்வதற்கு எந்த ஏற்பாடுகளுமில்லை. அத்தோடு காலத்தினடிப்படையில் வல்வெட்டித்துறை சந்திப்பிரதேசத்தில் நிலம் பெறுமதி வீழ்ச்சியடைய சாத்தியமில்லை என்ற அடிப்படையிலும் நிரந்தர கட்டடங்களிற்கு மேலதிகமாக தற்காலிக கட்டடங்களை சபை அனுமதியுடன் கடை உரிமையாளர் அமைந்திருக்கும் நிலையில் வாடகைப் பெறுமதி குறைய சாத்தியமில்லை என்ற அடிப்படையிலும் கௌரவ உறுப்பினர்களால் வாதப்பிரதி வாதங்கள் முன்வைக்கப்பட்டன. கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்கள் கருத்திலெடுக்கப்பட்டு வாடகைக் குறைப்பிற்கான விளக்கத்தினைக் கோரி விலை மதிப்பீட்டு திணைக்களத்தினருக்கு கடிதம் அனுப்புவதெனவும், நிரந்தர, தற்காலிக கட்டடங்களிற்கு தனித்தனியாக வாடகையை மீள் மதிப்பீடு செய்து தரும்படி கோரிக்கை அனுப்புவதெனவும், அதுவரை பழைய வாடகைப் பெறுமதி ரூபா 28,300.00 இனையே அறவிடுவதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து, Village Hotel தொடர்பாக தவிசாளர் தாம் Village Hotel இற்கு எதிராக வழக்கிடுவதற்காக எமது சபையால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி திருமதி மதுமிதாவிடம் கலந்துரையாடியதாகவும் அவர் குறித்த கட்டடம் கட்டத்தொடங்கி 4 வருடங்களாகியும் அனுமதியற்ற கட்டடம் என்ற வகையில் எம்மால் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கேள்வியெழுப்பியதாகவும் வழக்கிடுவதாக இருந்தார். வழக்கினை அனுமதியற்ற கட்டடம் என்ற வகையினாலா அன்றி அனுமதியற்ற வியாபாரம் என்ற வகையிலா முன்னெடுப்பது என்ற வினாவினை எழுப்பியதாகவும் குறிப்பிட்டு சபையினரின் கருத்துக்களை தெரிவிக்குமாறு குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பாக கடிதப்பரிமாற்றங்கள் எம்மால் குறித்த ஹோட்டல் உரிமையாளருடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும், அவை குறிப்பிட்ட கோவைகளில் இருப்பதாலும் எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மேலோட்டமாக கருத்துக்கூற முடியாது. எனினும் அனுமதியற்ற கட்டடம் மற்றும் வியாபாரம் என்ற இரு பிரிவுகளின் கீழும் வழக்குத் தொடரப்பட வேண்டும் என்ற கருத்தப்படி உறுப்பினர் திரு.க.சதீஸ், உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினி மற்றும் உறுப்பினர் திரு.ம.மயூரனால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மது வியாபாரத்திற்கு வியாபார அனுமதி வழங்குமாறு உரிமையாளரால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை சபைக்கு தவிசாளரால் அறியத்தரப்பட்டதோடு, எமது நகராட்சி மன்ற எல்லைக்கள் வியாபார ஸ்தலங்களிற்கான வியாபார வரி அறவிடப்படும் போதும் வியாபார உரிமம் வழங்கப்படும் போதும் இதுவரை கட்டட அனுமதிப்பத்திரம் பரிசீலிக்கப்படவில்லை. எனவே இவருடைய விண்ணப்பப்படிவத்தை உரிய நகரசபை விதிகளிற்கமைவாக பரிசீலிக்கும் அதே நேரம் அனுமதியற்ற கட்டடம் என்ற அடிப்படையில் வழக்காடப்படலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

குறித்த விடுதிக்கான கட்டட அனுமதி தொடர்பாக கரையோர பாதுகாப்பு திணைக்களம் மற்றும் UDA என்பன அனுமதி அளிப்பின் நகரசபையும் அனுமதி வழங்கலாம். கரையோர பாதுகாப்பு திணைக்களம் வழக்கு தாக்கல் செய்துள்ளமையினால் நாம் வழக்கு போடவேண்டுமென்ற தேவை இல்லை.அத்தோடு அங்கு Bar பொதுமக்களிற்காக இயக்கப்படுவதில்லையெனவும், அங்கு தங்கும் வெளிநாட்டு பயணிகளிற்கு மாத்திரம் உணவுடன் பரிமாறப்படுகின்றது எனவும், உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் கருத்து தெரிவிக்கப்பட்ட போது, அங்கு Bar தங்கியிருக்கும் பிரஜைகளிற்கு மாத்திரமன்றி ஏனையோருக்கும் பரிமாறப்படுவதை தம்மால் உறுதிப்படுத்த முடியுமென உறுப்பினர் திரு.ம.மயூரனால் தெரிவிக்கப்பட்டதோடு, அவ் Bar இற்கு நகரசபையின் பழைய தீர்மானத்திற்கமைய அனுமதி வழங்கப்படக்கூடாது என தெரிவிக்கப்பட்ட கருத்து உறுப்பினர் பலராலும் எற்றுக்கொள்ளப்பட்டது.

அவ்விடுதி தொடர்பாக இதுவரை காலமும் அனுப்பப்பட்டுள்ள கடிதங்களை பார்வையிட வேண்டுமென உறுப்பினர் திரு.ம.மயூரன் கேட்டுக்கொண்டதுடன் இவ்விடயம் தொடர்பாக ஒரு தெளிவுபடுத்தலை சபைக்கு வழங்கும்படி செயலாளரிடமும் கேட்டுக்கொண்டார். செயலாளரால் அதற்கான தெளிவுபடுத்தல் சபைக்கு வழங்கப்பட்டது. குறித்த விடயக் கோவையும் பார்வைக்கு

கொண்டுவரப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக நீங்கள் தனித்து தீர்மானிக்காது இவ்விடயத்தில் நீதிமன்றில் வழக்கினை தொடரலாமா என CLG, ACLG, UDA மற்றும் பொருத்தமான ஒரு சட்டத்தரணி ஆகியோருடன் கலந்தாலோசித்து பொருத்தமான ஒரு தீர்வினை எட்டப்பட வேண்டும் என உறுப்பினர் திரு,ஆ.ஞானேந்திரனாலும் ஆதிகோவிலடி மரக்கறிச்சந்தை விடயத்திலும் பல காலம் தீர்வில்லாமல் இருந்து தற்போது அங்கு வரி அறவிடப்படுவதால் இந்த விடயத்திலும் PHI இனை அனுப்பி அறிக்கையினை பெற்று அதனடிப்படையில் அனுமதி வழங்க முடியுமெனில் அதனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென உறுப்பினர் திரு.பா.ஜெகனாலும் குறிப்பிடப்பட்டது.

தொடர்ந்து உறுப்பினர்களிடையே இவ்விடயம் தொடர்பாக பல்வேறு கருத்துப்பகிர்வுகள் இடம்பெற்றதுடன், அவை வாதப்பிரதிவாதங்களாகவும் மாறின. இதன் காரணமாக தவிசாளரால் சபை நடவடிக்கையானது 15 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. 15 நிமிடங்களின் பின்னர் சபை நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டது. இவ்விடயத்தில் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து இன்மையினால் குறித்த வியாபார அனுமதியினை வழங்க சாதாரண நடைமுறைகளுக்கு அமைவாக பரிசீலித்தல் என்றோ அல்லது குறித்த விடுதிக்கு கரையோர பாதுகாப்பு திணைக்களத்துடனான வழக்கு தொடரப்படுவதனால் குறித்த வழக்கு முடியும் வரை வியாபார அனுமதியினை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென்றோ வாக்கெடுப்பிற்கு விடலாமா என தவிசாளரால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது அதனை வாக்கெடுப்பிற்கு விடுவதில் ஏனைய உறுப்பினர்கள் உடன்பாடு காட்டாமையினால் வாக்கெடுப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படாது நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களின் அடிப்படையில் உறுப்பினர் திரு.செ.தமிழினியன் மற்றும் உறுப்பினர் திரு.ம.மயூரன் ஆகியோரினால் தெரிவிக்கப்பட்ட கருத்தக்களினை சபையினர் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் முதலில் PHI மற்றும் உரிய தொழில்நுட்ப குழுவினர் Village Hotel இனை கள ஆய்வு செய்து அறிக்கையினைப் பெற்று அதனடிப்படையில் செயலாளரின் அறிக்கையினையும் பெற்று அதனடிப்படையில் அடுத்த சபையில் தீர்மானங்களை மேற்கொள்ளலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து **10.08.2022** ஆந் திகதி நடைபெற்ற **நிதிக்குழுக் கூட்ட சிபார்சுகள்** ஆராயப்பட்டு அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **சபைக்கு அறிவிக்க வேண்டிய விடயங்கள்** தொடர்பில் செயலாளரால் தெரிவிக்கப்பட்டு தேவையான விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **பிரேரணைகள்** சபையில் ஆராயப்பட்டன. முதலில் 11.102022 அன்று நடைபெற்ற விசேட சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட நெற்கொழு விளையாட்டு அரங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை எதிர்த்து வருகின்ற நாம் மாதாந்த சபை அமர்வில் இது தொடர்பாக மீண்டும் கலந்தாலோசித்து சிறந்த தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றுதல் என உறுப்பினர்கள் திரு.கு.கமலதாஸ், திரு.செ.தமிழினியன், திரு.ச.சண்முகதாஸ் உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் ஆகியோரால் முன்மொழிந்து வழிமொழியப்பட்ட பிரேரணையானது சபையில் ஆராயப்பட்ட போது, ஏற்கனவே நெற்கொழு தொடர்பான வழக்கினை தொடர்வதில்லை என சட்டத்தரணிக்கு கடிதம் அனுப்புவதென இறுதியாக நடைபெற்ற சபைக்கூட்டத்தில் தீர்மானமெடுக்கப்பட்டது. இது நகரசபைக்கு தேவையற்ற ஒரு வழக்காகும். இதனை தொடர்வதனால் நகரசபையின் நிதியினை வீண்விரயமாக்குகின்ற செயற்பாடே நடைபெறும். அதேசமயம் பல வருடங்களாக ஒரு விளையாட்டுக்கழகமானது அவ்விளையாட்டு மைதானத்தினை பயன்படுத்தி வருகின்ற சந்தர்ப்பத்தில், அதனை எவ்வித தொடர்புமில்லாமல் நகரசபையானது உரிமையாக்க நினைப்பது பொருத்தமானதல்ல என்பதனால் அவ்வழக்கினை தொடர்வதில்லையென உறுப்பினர் திரு.கு.கமலதாஸால் குறிப்பிடப்பட்டது.

இவ்வழக்கினை தொடர்வதனால் நகரசபையின் நிதி வீணடிக்கப்படுமென உறுப்பினர் கமலதாஸ் குறிப்பிட்டமை தவறானது. சென்ற விசேட சபைக்கூட்டத்தில் தெளிவாக எடுக்கப்பட்ட முடிவு யாதெனின் இவ்வழக்கு தொடர்பாக எவ்விதமான நிதி செலவும் நகரசபைக்கு இல்லாமல் இலவசமாக தொடரப்படுவதென்பதே ஆகும் என்பதுடன் இவ்விடயத்தில் நகரசபை ஆரம்பகாலகட்டத்திலேயே விலகியிருக்கலாமே எதற்காக நிதியை வீணடித்தீர்களென உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் குறிப்பிடப்பட்டது.அந்த விளையாட்டு மைதானத்தில் அனுமதியற்று மதில் கட்டப்பட்டுள்ளது அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? 50 வருடங்களாக கழுகு விளையாட்டு கழகமே அந்த

மைதானத்தினை பயன்படுத்தி வருகின்றது அதனை எதற்காக நகரசபை உரிமையாக்க நினைக்கின்றது? என உறுப்பினர் திரு.செ.தமிழினியனால் குறிப்பிடப்பட்டது.

கழுகு விளையாட்டு கழகமானது பல காலமாக இந்த மைதானத்தினை பயன்படுத்தி வருகின்றது. நகரசபை இவ்விளையாட்டு மைதானத்தினை பயன்படுத்துவது தொடர்பாக மறைந்த தவிசாளர் திரு.கோ.கருணானந்தராசா அவர்களிடமும் கூறியிருந்தேன் நீங்கள் இக்கழக உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களது நிலைப்பாட்டினை அறியுங்களென ஆனால் அவரகள் கதைக்கவில்லை. தற்போதும் அதையே கூறுகின்றேன் என உறுப்பினர் திரு.க.சதீஸால் குறிப்பிடப்பட்டதற்கு, குறித்த விளையாட்டு கழகத்தினரால் இவ்விடயம் தொடர்பாக தமது நிலைப்பாட்டினை கடிதம் மூலம் எமக்கு தெரியப்படுத்தியுள்ளார்களென தவிசாளரால் தெரிவிக்கப்பட்டு அக்கடிதம் தவிசாளரின் பணிப்பிற்கமைய செயலாளரால் சபையில் வாசிக்கப்பட்டது.

அதில் குறித்த மைதானத்தினை தமது கழகமே 50 வருடங்களாக பயன்படுத்தி வருகின்றதெனவும் அதனை நகரசபை பொது விளையாட்டரங்காக மாற்ற முனைவதற்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், இம்மைதானத்தினை தமக்கு சொந்தமானதாக மாற்றுவதற்குரிய சகல நடவடிக்கையினையும் தாம் முன்னெடுக்க தயாராக இருப்பதாகவும், இதற்கு தமது புலம்பெயர் உறவுகள் உறுதுணையாக இருப்பதுடன், ஒரு சிலரின் அரசியல் இலாபங்களுக்காக மைதான விடயத்தில் நகரசபை தலையிட வேண்டாமெனவும் ஊர்மக்கள் சார்பாக அவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

நகரசபைக்கு எந்த உடமையும் இல்லாத காணிக்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டாம், எனவே மேன்முறையீடு செய்ய வேண்டாமென்பதே எனது கருத்தாகுமென உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டது. முதலாவதாக மேன்முறையீடு செய்ய கூடாது, இரண்டாவது மேன்முறையீட்டினை மீளப்பெற வேண்டும் மூன்றாவதாக மேன்முறையீடு செய்ய வேண்டாமென்பதற்கான தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் குறிப்பிடப்பட்டது. இது பல காலப்பிரச்சனையாகும். அங்குள்ள 240 பரப்பு நிலத்தையும் அவர்கள் பயன்படுத்தப்பட போவதுமில்லை. எமக்கு பொது விளையாட்டரங்கு தேவை என்பதனால் அதற்கு என்ன செய்ய வேண்டுமெனவும் பார்க்க வேண்டுமெனவும் உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினியால் குறிப்பிடப்பட்டதற்கு இன்று வழக்கு தொடர்வதா இல்லையா என்பதே பிரேரணை காணியினை சுவீகரிப்பதோ அல்லது எதுவாக இருப்பினும் அடுத்த கட்ட நடவடிக்கையாகுமென உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் குறிப்பிடப்பட்டது.

தொடர்ந்து உறுப்பினர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக சபையின் அங்கீகாரத்திற்காக வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. அதில் வழக்கினை தொடரலாம் அல்லது தொடர்வதில்லை என்ற வகையில் வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட போது 06 உறுப்பினர்கள் நெற்கொழு காணி வழக்கினை தொடரவேண்டுமென ஆதரவாகவும், 09 உறுப்பினர்கள் அதனை தொடரவேண்டாமென எதிராகவும் வாக்களித்து மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் நெற்கொழு காணி வழக்கினை தொடர்வதில்லை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து தற்போது அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை, திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்துவதாயின் எமது பிரதேசத்திற்கு உட்பட்ட ஒவ்வோர் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் விழிப்புக்குழு அமைப்பது கட்டாயம் எனக்கருதப்படுவதுடன், இதில் கிராம சேவையாளர், பொது அமைப்புக்கள், பொலிசார், பொதுமக்கள் என எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும். இதற்கு உறுதுணையாக நகராட்சி மன்றமும் இணைந்து செயற்பட வேண்டும். நகரசபைக்கு உட்பட்ட சமூகத்தை சீரழிக்க திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சீர்கேட்டினை ஒன்று சேர்ந்து முறியடிக்க அனைவரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும். போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விசேட தொலைபேசி எண் 1188 என்ற எண்ணிற்கு தகவல் வழங்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறு இருப்பினும் எமது பிரதேசத்தினை காக்க வேண்டியது நகராட்சி மன்றத்தின் கடமை என உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் முன்மொழியப்பட்டு உறுப்பினர் திரு.கு.கமலதாஸால் வழிமொழியப்பட்ட பிரேரணையானது சபையில் ஆராயப்பட்ட போது குறித்த விடயத்திற்கு அனைவரும் தமது ஒத்துழைப்பினை வழங்கலாமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து **பிற விடயங்கள்** தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- தீருவிலில் நீர் வழிந்தோடுகின்ற இடத்தில் கொங்கீறீற் போடப்பட்டு கட்டப்பட்டுள்ள மதவினை உடைத்து நீர் வழிந்தோடக்கூடியவாறு சீர்செய்கின்ற வேலைத்திட்டத்தினை நகரசபையின்

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையுடன் club மூலமாக மேற்கொள்வதற்கு உறுப்பினர் திரு.ம.மயூரனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- ஊறணி வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பாதையில் மழைநீர் தேங்கி நின்று மக்களின் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் இப் பிரச்சனையினை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினியால் குறிப்பிடப்பட்டது.

இறுதியாக தவிசாளரின் நன்றியுடன் முற்பகல் 11.00 மணியளவில் சபை அமர்வு நிறைவுபெற்றது.

**தீர்மான இல: 1197/21.10.2022**

**2022 ஆண்டு சபைநிதி வேலைத்திட்ட மாற்றம் தொடர்பானது :**

2022 ஆம் ஆண்டு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சபைநிதியினூடாக உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினி மற்றும் உறுப்பினர் திரு.செ.தமிழினியனின் சுய விருப்பின் அடிப்படையில் அவர்களால் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களை மாற்றி தலைவை வீதி (NJVUE252) புனரமைப்பிற்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:-திரு.ம.மயூரன்

**தீர்மான இல :1198/21.10.2022**

**ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | September 01 | நி.தர்சினி (செயலாளர்) | சந்நிதி கோவில் உற்சவ தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மண்ணெண்ணைக்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் | 17,000.00 |
| 02 | September 02 | சி.சர்மி (பயிலுனர்) | 2022 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களிற்கான வேதனக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 17,500.00 |
| 03 | September 03 | எஸ்.மோகனசுந்தரம் | 01.08.2022 – 31.08.2022 வரை பத்திரிகைகள், சஞ்சிகைகள் கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 10,770.00 |
| 04 | September 04 | Asian Media Publication (Pvt) Ltd | 1. தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ வாகனத்தரிப்பிடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தலை தினக்குரல் பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் - 8,625.00 | 16,875.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2. தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ நகராட்சி மன்ற பொது அறிவித்தலை தினக்குரல் பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் - 8,250.00 | |
| 05 | September 05 | இ.சுரேனும் மறுபேரும் | தவிசாளர், துணைத்தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான 2022 ஆகஸ்ட் மாதத்திற்குரிய தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 25,500.00 |
| 06 | September 06 | அ.சண்முகராசா | முக்கிராவத்தைை பாதைக்கான 2022 ஆம் ஆண்டிற்கான (01.08.2021 – 31.07.2022) குத்தகைக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 7,200.00 |
| 07 | September 07 | காந்தி சனசமூக நிலையம் | காந்தி சனசமூக நிலையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் ஆகஸ்ட் 01.08.2022 – 31.08.2022 வரையான காலப்பகுதிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 99,000.00 |
| 08 | September 08 | முகாமையாளர், இலங்கை மின்சார சபை | தொண்டமானாறு பேரூந்து நிலைய சிற்றுண்டிச்சாலைக்கான மின்சாரக்கட்டண நிலுவை கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 29,044.08 |
| 09 | September 09 | Managing Director, Sundra Security Plus Cleaning (Pvt) Ltd | எமது நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆகஸ்ட் 2022 மாத வேதனக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 135,182.32 |
| 10 | September 11 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 02 ஊழியர்களுக்கான ஆடி மாதத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 17,344.58 |
| 11 | September 13 | முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | 2022 செப்ரெம்பர் மாதத்திற்கான பஸ்தரிப்பட நீர்ப்பாவனைக்கான நீர்வழங்கல் பட்டியல் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 439.80 |
| 12 | September 14 | முகாமையாளர், இலங்கை மின்சார சபை | நகராட்சி மன்றப் பிரிவுகளின் ஆவணி மாத மின்சாரக்கட்டணத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் (நீச்சல் தடாகம் - 917.40<br>மீன் சந்தைக்கட்டடம் - 761.20<br>வாகனத்தரிப்பிடம் - 1,319.70<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.1 - 725.90<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.2 – 1,731.60<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.3 – | 20,844.95 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2,.928.80<br>அலுவலகக்கட்டடம் - 11,916.35)<br>தீருவில் பூங்கா – 304.00<br>தொண்டமானாறு சிற்றுண்டிச்சாலை – 240.00 | |
| 13 | September 15 | Emerald Hardware Stores | கொள்வனவு செய்யப்பட்ட (வாகன றொட்ஸ்) பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,100.00 |
| 14 | September 16 | Asian Media Publications(Pvt) Ltd | தனியார் பாதுகாப்புச்சேவை 2022 கேள்வி அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 7,500.00 |
| 15 | September 18 | முகாமையாளர், இலங்கை மின்சார சபை | நகராட்சி மன்றப் பிரிவுகளின் ஆடி மாத மின்சாரக்கட்டணத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>(நீச்சல் தடாகம் - 423.00<br>மீன் சந்தைக்கட்டடம் - 679.20<br>வாகனத்தரிப்பிடம் - 1,667.40<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.1 - 825.60<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.2 – 2,179.80<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.3 – 3,.058.20<br>அலுவலகக்கட்டடம் - 15,252.45<br>தீருவில் பூங்கா – 240.00தொண்டமானாறு<br>சிற்றுண்டிச்சாலை – 240.00 | 24,565.65 |
| 16 | September 19 | தெ.அஜந்தராஜ் | ஆடி மாதத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 4,921.87 |
| 17 | September 20 | த.கஜேந்திரன் | தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ கால வாகனத்தரிப்பிடத்திற்கான குத்தகை வைப்புப்பணத்தை மீளளிக்கும் வகையில் | 5,000.00 |
| 18 | September 21 | முகாமையாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம் | நகராட்சி மன்றப் பிரிவுகளின் 2022 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திற்கான தொலைபேசிப்பட்டியல் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>0212265622 – 685.16<br>0212265344 – 2,487.74<br>0213154483 – 655.85 (யூலை)<br>0213154483 – 1,565.07 (ஆகஸ்ட்)<br>0212263973 – 2,166.93<br>0212265166 – 2,253.05<br>0212263170 – 1,760.76<br>0212265611 – 1,257.48<br>0212265610 – 1,044.79 | 13,876.83 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | September 29 | பா.அகர்ஷன் | 31.08.2022 – 26.09.2022 வரையான காலப்பகுதிக்கு ஆதனவரி நிலுவை அறவீடு செய்தமைக்கான தரகுப்பண கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 45,396.78 |
| 20 | September 30 | Jaffna District Co – operative Council | பற்றுச்சீட்டு புத்தகங்கள் அச்சடித்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 72,575.00 |
| 21 | September 31 | North Link Engineering | Toner கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 69,610.43 |
| 22 | September 32 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டி | மைலோ பால் கொள்வனவ செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 5,400.00 |
| 23 | September 33 | Advanced Technology Systems | திருத்தம் செய்யப்பட்ட கணணிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,000.00 |
| 24 | September 34 | வி.தெய்வேந்திரஜயர் | தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய தற்காலிக வாகனத்தரிப்பிடம் வழங்குவதற்கான குத்தகை ஒப்பந்தம் மேற்கொண்டமைக்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் | 2,500.00 |
| 25 | September 35 | முகாமையாளர், இலங்கை மின்சார சபை | நகராட்சி மன்றப் பிரிவுகளின் செப்ரெம்பர் மாத மின்சாரக்கட்டணத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>(நீச்சல் தடாகம் - 635.00<br>மீன் சந்தைக்கட்டடம் - 510.00<br>வாகனத்தரிப்பிடம் - 1,999.00<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.1 - 835.00<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.2 – 2,160.00<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.3 – 3,285.00<br>அலுவலகக்கட்டடம் - 17,880.00<br>தீருவில் பூங்கா – 360.00<br>தொண்டமானாறு சிற்றுண்டிச்சாலை – 489.20) | 28,153.20 |
| 26 | September 36 | Advanced Technology Systems | திருத்தம் செய்யப்பட்ட Router இற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,450.00 |
| 27 | September 37 | Jega Motors | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான (1 ½ F Cab - 01, R.Soc ¾*½ - 01) கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 950.00 |
| 28 | September 38 | Emerald Hardware Stores | 1. கொள்வனவு செய்யப்பட்ட நீர் வழங்கல் சேவைக்குத் தேவையான பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 18,200.00 | 23,800.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான ( ¾ Tap- 04) கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 5,600.00 | |
| 29 | September 39 | Evergreen Printers (Pvt) Ltd | துண்டுப்பிரசுரம் அச்சடித்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,000.00 |
| 30 | September 40 | Chithamparappillai Book Dept | கொள்வனவு செய்யப்பட்ட File இற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,100.00 |
| 31 | September 41 | Bala Service Station | YM - 7202 இலக்க வாகன சுத்திகரிப்பு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 6,750.00 |

| தொ. இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | 01 | அ.கதிர்ஷன் | வல்வெட்டித்துறை ரேவடிப்பகுதியில் கடைத்தொகுதி அமைப்பதற்கான வரைபடம் வரைந்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 35,161.77 |
| 02 | 02 | அ.கதிர்ஷன் | தொண்டமானாறு பகுதியில் வாகனத்தரிப்பிடம் அமைப்பதற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 22,180.15 |

முன்மொழிந்தவர் : திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர் : திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1199/21.10.2022**

**ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ.இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1 | கு.ரதிவதனி | இடர்கடன் வழங்கும் வகையில் | 187,300.00 |
| 2 | 2 | எஸ்.சிவாமேனன் | இடர்கடன் வழங்கும் வகையில் | 204,500.00 |
| 3 | 3 | பொது முகாமையாளர், MPCS, பருத்தித்துறை | 2022 செப்ரெம்பர் மாதம் சபை வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்பியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 267,390.00 |
| 4 | 4 | பொது முகாமையாளர், MPCS, பருத்தித்துறை | 2022 ஐப்பசி மாதம் சபை வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்பியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 256,590.00 |
| 5 | 5 | United Motor PLC | NP LM - 4627 இலக்க வாகனம் திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 241,636.59 |

முன்மொழிந்தவர் : திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர் : திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1200/21.10.2022**

**வகைமாற்றம்**

2022 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் பின்வரும் தலைப்புக்களில் ஒதுக்கீடானது பற்றாக்குறையாக உள்ளமையால் அதனை பின்வரும் வகையில் வகைமாற்றம் செய்யலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

| தொ.இல | சேமிப்பு தலைப்பு (தற்போதைய மீதி) | செலவின தலைப்பு (தற்போதைய மீதி) | மாற்றவேண்டிய தொகை |
|---|---|---|---|
| **01** | 5-1-453<br>மின்சாரம்<br>**96,584.60** | 5-1-442<br>பராமரிப்பும் திருத்தமும்<br>**268,000.00** | **90,000.00** |
| 02 | 1-1-412<br>மேலதிக விடுமுறை வேதனம்<br>**201,331.52** | 1-2-424<br>பயணச் செலவு (கடமை)<br>**11,032.00** | **50,000.00** |
| **03.** | 1-1-452<br>தொடர்பிணைப்பு தொலைபேசி<br>**99,607.42** | 2-5-441(1)<br>வாகனங்களைப் பழுது பார்த்தலும் பேணலும்<br>**3,345.00** | **40,000.00** |
| | 1-1-453<br>பயன்பாட்டுசேவையும், மின்சாரமும்<br>**119,160.85** | | **40,000.00** |
| | 3-1-441<br>இயந்திர உபகரணங்கள் பழுதுபார்த்தலும் பேணலும்<br>**226,200.00** | | **150,000.00** |
| | 6-2-453<br>மின்சாரம் வாடகை<br>**100,000.00** | | **75,000.00** |
| | 3-1-419 (இ)<br>பயிலுனர் படி<br>**118,500.00** | | **30,000.00** |
| | | | **335,000.00** |

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி

வழிமொழிந்தவர்:-திரு.அ.சதீஸ்வரன்

**தீர்மான இல :1201/21.10.2022**

**தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத காலத்தில் வாகனத்தரிப்பிடம் அமைப்பதற்கான அனுமதி**

வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற ஊழியர் நலன்புரிச்சங்கத்தினரின் கோரிக்கைக்கிணங்க, கந்தசஷ்டி விரத காலத்தில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வாகனத்தரிப்பிடம் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தில் 25% இனை பெற்றுக்கொண்டு தற்காலிக வாகனத்தரிப்பிடம் அமைப்பதற்கு அனுமதியளிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் : திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர் : திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :- 1202/21.10.2022**

**நெற்கொழு காணி வழக்கினை தொடர்வதற்கான அனுமதி :**

11.102022 அன்று நடைபெற்ற விசேட சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட நெற்கொழு விளையாட்டு அரங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை எதிர்த்து வருகின்ற நாம் மாதாந்த சபை அமர்வில் இது தொடர்பாக மீண்டும் கலந்தாலோசித்து சிறந்த தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றுதல் என உறுப்பினர்கள் திரு.கு.கமலதாஸ், திரு.செ.தமிழினியன், திரு.ச.சண்முகதாஸ் உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் ஆகியோரால் முன்மொழிந்து வழிமொழியப்பட்ட பிரேரணையானது சபையில் ஆராயப்பட்ட போது உறுப்பினர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டதால் இது சபையின் அங்கீகாரத்திற்காக வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

| இல | நெற்கொழு காணி வழக்கினை தொடர்வதற்கான அனுமதி | இல | நெற்கொழு காணி வழக்கினை தொடர்வதில்லை என்பதற்கான அனுமதி |
|---|---|---|---|
| 1 | திரு.இ.சுரேன் | 1 | திரு.த.சுந்தரலிங்கம் |
| 2 | திரு.ஆ.ஞானேந்திரன் | 2 | திரு.ம.மயூரன் |
| 3 | திரு.க.சதீஸ் | 3 | திரு.செ.தமிழினியன் |
| 4 | திருமதி.கு.இராஜேஸ்வரி | 4 | திரு.ச.சண்முகதாஸ் |
| 5 | திரு.பா.ஜெகன் | 5 | திரு.து.ஶ்ரீதரன் |
| 6 | திரு.அ.சதீஸ்வரன் | 6 | திருமதி.க.சுந்தரேஸ்வரி |
| | | 7 | திரு.ச.செல்வேந்திரா |
| | | 8 | திரு.கு.கமலதாஸ் |
| | | 9 | திருமதி.இ.கைலாஜினி |

வாக்கெடுப்பின் போது 06 உறுப்பினர்கள் நெற்கொழு காணி வழக்கினை தொடரவேண்டுமென ஆதரவாகவும், 09 உறுப்பினர்கள் அதனை தொடரவேண்டாமென எதிராகவும் வாக்களித்து மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் நெற்கொழு காணி வழக்கினை தொடர்வதில்லை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 1203/21.10.2022**

**அதிகரித்து வருகின்ற போதைப்பொருள் பாவனை, திருட்டு சம்பவங்கள் என்பவற்றினை கட்டுப்படுத்துதல் :**

தற்போது அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை, திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்துவதாயின் எமது பிரதேசத்திற்கு உட்பட்ட ஒவ்வோர் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் விழிப்புக்குழு அமைப்பது கட்டாயம் எனக்கருதப்படுவதுடன், இதில் கிராம சேவையாளர், பொது அமைப்புக்கள், பொலிசார், பொதுமக்கள் என எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும். இதற்கு உறுதுணையாக நகராட்சி மன்றமும் இணைந்து செயற்பட வேண்டும். நகரசபைக்கு உட்பட்ட சமூகத்தை சீரழிக்க திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சீர்கேட்டினை ஒன்று சேர்ந்து முறியடிக்க அனைவரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும். போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விசேட தொலைபேசி எண் 1188 என்ற எண்ணிற்கு தகவல் வழங்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறு இருப்பினும் எமது பிரதேசத்தினை காக்க

வேண்டியது நகராட்சி மன்றத்தின் கடமை என உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் முன்மொழியப்பட்ட பிரேரணையானது சபையில் ஆராயப்பட்டு ஏகமனதான தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவா்:-திரு.கு.கமலதாஸ்

**தீர்மான இல: 1204/21.10.2022**

**Village Hotel இற்கு வியாபார அனுமதி வழங்குதல் தொடர்பான கோரிக்கை தொடர்பானது**

Village Hotel இற்கு வியாபார அனுமதி வழங்குமாறு உரிமையாளரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமையினால் இவ்விடயம் தொடர்பாக சபையில் ஆராயப்பட்ட போது, முதலில் பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கை மற்றும் அதனடிப்படையிலான செயலாளரின் அறிக்கை என்பவற்றினை அடுத்த மாத சபை அமர்வில் சமர்ப்பிக்குமாறும் அவற்றினை ஆராய்ந்து அதனடிப்படையில் வியாபரா அனுமதி குறித்து தீர்மானிக்கலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ம.மயூரன் வழிமொழிந்தவா்:-திரு.செ.தமிழினியன்

**தீர்மான இல: 1205/21.10.2022**

**திரண்ட நிதிக்கு மாற்றுவதற்கான அனுமதி தொடர்பானது**

2020 ஆம் ஆண்டு காட்டுவளவு வடிகாலமைப்பு வேலைக்கான பாதுகாப்பு வைப்பினை திரண்ட நிதிக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவா்:-திரு.அ.சதீஸ்வரன்

**தீர்மான இல: 1206/21.10.2022**

**நந்தவனம் கடைத்தொகுதியின் மாதவாடகையின் மிள்மதிப்பீடு தொடர்பானது :**

நந்தவனம் நடைத்தொகுதியின் மாதவாடகை தொடர்பான அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் JN/RP/3360 ஆம் இலக்க 11/10/2022 ஆந்திகதிய கடிதத்தின் பிரகாரம் மாதவாடகை ரூபா 28,000.00 என்பது தொடர்பாக சபையில் ஆராயப்பட்டு ஏற்கனவே ரூபா 28,300.00 மாதவாடகையாக அறவிடப்பட்டு வருவதனால் முன்னைய பெறுமதியும் தற்போதுள்ள பெறுமதியும் வேறுபடுவதற்கான விளக்கம் கோரி அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்புவதெனவும், அதற்கான விளக்கம் கிடைக்கும் வரையில் பழைய பெறுமதியினையே (ரூபா.28,300.00) தொடர்ந்தும் அறவிடுவதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.அன்ரநற் சுபாசினி வழிமொழிந்தவா்:-திரு..கு.கமலதாஸ்

**தீர்மான இல: 1207/21.10.2022**

**தீருவிலில் நீர் வழிந்தோடுகின்ற இடத்தில் கொங்கீறீற் போடப்பட்டு கட்டப்பட்டுள்ள மதவினை உடைத்து சீர்செய்வதற்கான அனுமதி :**

தீருவிலில் நீர் வழிந்தோடுகின்ற இடத்தில் கொங்கீறீற் போடப்பட்டு கட்டப்பட்டுள்ள மதவினை உடைத்து நீர் வழிந்தோடக்கூடியவாறு சீர்செய்கின்ற வேலைத்திட்டத்தினை நகரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையுடன் clup மூலமாக மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ம.மயூரன் வழிமொழிந்தவா்:-திரு.அ.சதீஸ்வரன்

**தீர்மான இல 1208/21.10.2022**

**S27/03/10.02.2021 ஆம் இலக்க தீர்மானத்திற்கு மேலதிகமாக திண்ம கழிவு முகாமைத்துவத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கு சுற்று மதில் அமைத்து பாதுகாப்பதற்காக சபையின் நிலையான வைப்பினை முடிவுறுத்துவதற்கான அனுமதி.**

திண்ம கழிவு முகாமைத்துவத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கு முதற்கட்டமாக சுற்று மதில் அமைத்து வாகனங்கள் நிறுத்துமிடம் அமைப்பதுடன் ஒரு கிணறும் வெட்டுவதெனவும் அத்துடன் மதில் அமைக்கும் போது நினைவுக்கல் பதிப்பதெனவும் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை செயற்படுத்துவதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ள சபையின் 141-60-01-00008416-7 ஆம் கணக்கிலக்க 4,000,000.00 பெறுமதியான நிலையான வைப்பினை முடிவுறுத்துவதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.பா.ஜெகன் வழிமொழிந்தவர்:- திரு.து.ஸ்ரீதரன்

**தீர்மான இல :1209/21.10.2022**

**2022 ஆம் ஆண்டிற்கான சபைநிதி வேலையினை மாற்றஞ்செய்வதற்கான அனுமதி :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான சபைநிதி வேலையில் கௌரவ தவிசாளர் திரு.இ.சுரேன் ஏற்கனவே வழங்கிய திட்ட முன்மொழிவான குச்சம் கடற்கரையில் பூங்கா அமைத்தலும் அதறகு கல்லு பதித்தலும் என்பதனை தீருவில் பூங்காவில் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என மாற்றஞ்செய்ய அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்

**தீர்மான இல :1210/21.10.2022**

**குறைநிரப்பு :**

2022 ஆம் ஆண்டு ரூபா. 2,770,000.00 வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளமையினால் இத்தொகையினை பின்வருமாறு குறைநிரப்புச்செய்ய அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

| | குறைநிரப்பு 2022 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **மாதம்:- October 2022** | | | | | |
| | வருமானத் தலைப்பு | | தொகை | செலவினத் தலைப்பு | | தொகை |
| **1** | 3-1-380 (ஈ) | LDSP நிதி | 393,000.00 | 3-3-520 (ஈ) | LDSP நிதி | 393,000.00 |
| | | | | | | |
| **2** | 1-1-372 (இ) | அரச நன்கொடை- ஏனையவை (CDLG) | 780,000.00 | 2-5-479 | ஏனையவை | 780,000.00 |
| | | | | | | |
| **3** | 1-1-365 | பழைய பொருள் விற்பனை | 39,000.00 | 1-1-419(இ) | பாதுகாப்பு, வெளிக்களப் பணியாளர் வேதனம் | 517,000.00 |
| | 2-1-325 | இயந்திர வாடகை | 105,000.00 | 1-1-432 | எரிபொருள் | 280,000.00 |
| | 2-1-331 | வியாபார உரிமங்கள் | 680,000.00 | 2-5-432 | எரிபொருள் | 800,000.00 |
| | 2-1-365(1) | குப்பை கூழங்கள் மக்கி இடுபாடுகள் அகற்றல் | 100,000.00 | | | |
| | 3-1-362(இ) | வேலைகளுக்கான கேள்விப்படிவக | 29,000.00 | | | |
| | 4-1-343 | நீர்வழங்கும் சேவை- போக்குவரத்து | 44,000.00 | | | |
| | 5-2-321(ஈ) | மாட்டறைச்சிக்கடை வாடகை | 209,000.00 | | | |
| | 5-2-323(ஐ) | செல்வச்சந்நிதி வாகன தரிப்பிட குத்தகை, பட்டப்போட்டி | 255,000.00 | | | |
| | 5-2-351 | சந்தைக் குத்தகை விறாந்துப்பண | 38,000.00 | | | |
| | 5-2-363 | விளம்பரமும் விற்பனை மேம்படுத்தலும் | 98,000.00 | | | |

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:-திரு.அ.சதீஸ்வரன்

**தீர்மான இல :1211/21.10.2022**

**நகராட்சி மன்றத்தினால் வழங்கப்படுகின்ற கட்டடம் சார்ந்த சேவைகளுக்கான கட்டணங்களை அதிகரித்தலும், UDA கூட்டகுழுவின் அங்கத்தவர்களது கொடுப்பனவினை சுற்றறிக்கைப்படி அதிகரித்தலுக்குமான அனுமதி:**

தீர்மான இல :1172/31.08.2022 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) கூட்டகுழுவின் அங்கத்தவர்களுடைய கொடுப்பனவிற்கான தொகை தவறுதலாக குறிப்பிடப்படாது விடப்பட்டுள்ளமையினால் இத்தீர்மானப்படி சுற்றறிக்கைப்பிரகாரம் ரூபா 2,500.00 இனை அவர்களுக்கு வழங்க அனுமதிப்பதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்

**தீர்மான இல :1212/21.10.2022**

**நகராட்சி மன்றத்திற்கு நிலையான வைப்புக்களை விசேட வட்டி வீதங்களுக்கு ஏற்ப மாற்றுவதற்கான அனுமதி:**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குரிய நிலையான வைப்புக்களினை தற்போது வங்கிகளினால் நிலையான வைப்புக்களிற்காக வழங்கப்படுகின்ற விசேட வட்டியில் மாற்றுவதன் மூலம் அதிக வட்டியினை பெற்றுக்கொள்ள அனுமதிப்பதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ்